110—

கொப்பரைக் கொள்முதல் மையம்

***4322—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிள்ளியூர் தொகுதி, கருங்கல்லில் கொப்பரைக் கொள்முதல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தென்னை விவசாயிகளின் நலன் கருதி, கன்னியாகுமரி மாவட்டத்தில் திங்கள் நகர் மற்றும் தேரூர் ஆகிய இடங்களில் கொப்பரைக் கொள்முதல் மையங்கள் கடந்த 15-6-2016-ல் தொடங்கப்பட்ட நிலையிலும், நாளது தேதிவரை கொப்பரையை விவசாயிகள் விற்பனைக்குக் கொண்டு வரவில்லை. இந்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் கருங்கல்லில் கொப்பரைக் கொள்முதல் மையம் அமைப்பதற்கான தேவை இல்லாததால், அவ்விடத்திலிருந்து 7 கி.மீ. தூரத்திலுள்ள திங்கள் நகரில் செயல்படும் கொப்பரைக் கொள்முதல் நிலையத்தை அப்பகுதி விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 111, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சந்திரசேகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.